**2019 பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்களை தன்னிச்சையானதும் மற்றும் சட்ட விரோதமானதுமான வகையில் திரிவுபடுத்துதல்**

தேர்தல் ஆணைக்குழுவிற்கான கடிதம்

மதிப்புக்குரிய ஆணைக்குழுவிற்கு,

**2019 பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல்களை தன்னிச்சையானதும் மற்றும் சட்ட விரோதமானதுமான வகையில் திரிவுபடுத்துதல்**

சில கிராம சேவகர்களினால், விசேடமாக கொழும்பு மாவட்டத்தில், சம்பந்தப்பட்ட பகுதி வாக்காளர் பட்டியல்களிலிருந்து நீண்ட கால வதிவாளர்களான தங்களது பெயர்கள் தன்னிச்சையான முறையில் நீக்கப்பட்டிருப்பதாகவும், தாங்கள் நியாயமற்ற வகையில் தண்டிக்கப்பட்டிருப்பதாகவும், நம்பிக்கைக்குரிய ஆட்கள் சிலரினால் ஒரு முறைப்பாடு எங்களது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்தக் குடித்தனக்காரர்கள் 2018 ஆண்டிற்கான வாக்காளர் பதிவுப் படிவங்களை சரியானவாறும் மற்றும் அதற்கான கால எல்லைக்குள் பூர்த்தி செய்து கையளித்தும் உள்ளதுடன், அவர்கள் அதே வதிவிட முகவரியில் பல வருடங்களாக இருந்து, கடந்த ஒரு தசாப்தம் அல்லது அதற்கு மேலாக அனைத்துத் தேர்தல்களிலும் வாக்களித்து வந்துள்ளதினால், பல வருடங்களுக்கும் மேலாக இடையூறின்றி அவர்கள் குடியிருந்த வதிவிட வாக்காளர் பட்டியலில் இருந்து தங்களது பெயர்கள் நீக்கப்பட்டமையை அறிந்து அவர்கள் மிகுந்த அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்துள்ளனர். இது குறித்து அவர்கள் விசாரித்த பொழுது, அவர்களது பெயர்கள் நீக்கப்பட்டமைக்கான காரணங்கள் எதுவும் அவர்களுக்கு வழங்கப்படாத போதிலும், இந்தக் கட்டத்தில் எதுவும் செய்வதற்கில்லை என அவர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். உங்களது உத்தியோகபூர்வ இணையத்தளம் தற்போது செயற்படாத நிலையில், இந்த ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை அதனை மேலும் மோசமடைய வைத்துள்ளது.

தனிப்பட்ட வாக்காளர்கள் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் என்பதுடன் அவர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு ஒரு உத்தியோகபூர்வ பதிலிறுப்பை வழங்குவதற்கு உங்களை நாங்கள் வேண்டிக் கொள்கிறோம். குறிப்பாக, தங்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இன்னமும் உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல் செயலகத்திற்கு விஜயம் செய்ய முடியாத வயது முதிர்ந்த வாக்காளர்கள் மத்தியில் இந்த முறைமை ஏற்படுத்தியுள்ள நம்பகத்தன்மையின்மையைக் குறைக்கும் பொருட்டு பின்வருபவை குறித்து பகிரங்கமாக தெளிவுபடுத்துவதற்கான கடப்பாடு உங்கள் மீதானதாக உள்ளது:

1. சம்பந்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களிலிருந்து இந்த வாக்காளர்களின் பெயர்கள் விடுபட்டமைக்கான ஒரு விளக்கத்தை வழங்குதலும், மற்றும் எதிர்வரும் 16 ஆம் திகதி அவர்கள் தேர்தலில் வாக்களிப்பதை அனுமதிக்கும் ஒரு பரிகாரப் பொறிமுறை அங்கிருப்பதை உறுதிசெய்வதுமாகும்.

2. வேண்டுமென்றேயான இந்த விடுபாடுகளுக்காக தவறு செய்த கிராம சேவகர்களை பொறுப்புக்கூறுபவர்களாக நிறுத்துவதற்கான உரிய செயன்முறையை விளக்குதல்.

3. உடனடியாகவே, இணையமுறை (online) ஊடான வாக்காளர் பதிவுப் பட்டியல் செயற்பாட்டில் இருப்பதை உறுதிசெய்தல்.

நிலைமையின் அவசரதன்மை மற்றும் பாதிக்கப்பட்ட இந்த நபர்கள் அவர்களது வாக்குரிமை மறுக்கப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்கு உடனடியான ஒரு பரிகாரத்தின் தேவை என்பவற்றைக் கவனத்தில் கொண்டு, பொதுமக்களிற்கு இது தொடர்பில் அறிவிப்பதற்கும் அவ்வாறே பொருத்தமான அனைத்து வழிமுறைகள் மூலமாக பரந்த ஒரு விளம்பரப்படுத்தலுக்கும் உங்களை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

நன்றி.

உண்மையுள்ள,

CMEV கூட்டு-ஏற்பாட்டாளர்கள்